சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள். 19.08.2024

SC.NO.31/2023

PW 6: Lw11 செழியன் (வயது 58 ) த/பெ.பழனிவேல்

(2 வது எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )

(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சுகாதார துறையில், இணை இயக்குநராக கரூர் மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 04.12.2010 மதியம் 12.00 மணிக்கு அரசு மருத்துவமனையில் பணி மருத்துவராக பணியில் இருந்தபோது, சிவகுமார் என்பவரின் மனைவி சுஜாதா 32 வயது, கொப்பாவளியை சேர்ந்தவர் சிகிச்சைக்காக அவரது கணவரால் அழைத்து வரபட்டார், அவர் தன்னை அடையாளம் தெரியாத ஒரு நபரால் 03.12.2010 அன்று அவரது வீட்டில் கத்தியால் தாக்கி தாலி கொடியை அறுத்து விட்டு சென்றதாக கூறினார். நான் அவரை பரிசோதனை செய்தபோது, 2 செ.மி அளவில் இரண்டு முழங்கால்களிலும் சிராய்ப்பு காயம் இருந்தது. மேலும், அவரது இடது காலில் பாதத்தில் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது, இடது முன் நெற்றியில் இரத்த கட்டு காயம் ஏற்பட்டிருந்தது. நான் அவரை புற நோயாளியாக சிகிச்சை அளித்து அனுப்பி விட்டேன். அவரது மேற்கண்ட காயங்கள் மூன்றும் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். அவருக்கு

1. 2 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் 2 முழங்கால்களிலும் இருந்தது.
2. இடது காலில் பாதத்தில் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது
3. இடது நெற்றியில் ஒரு ரத்த கட்டு வீக்கம் இருந்தது.

என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு நான் வழங்கியது அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.5** ஆக குறியீடு. விபத்து பதிவேட்டில் சாதாரண காயத்திற்கான சான்று இணைக்கப்பட்டுள்ளது. அந்த சான்று **அ.சா.ஆ.6**. ஒரு நபரை சாதாரணமாக கத்தியில் தாக்கும்போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்மந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள்.

<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை தனிப்பட்ட முறையில் விசாரித்து வாக்குமூலம் பெற்றார் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் கூறிய தகவலை வாக்குமூலமாக ஆய்வாளரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொன்ன காயத்தை தவிர வேறு எந்த காயமும் பாதிக்கப்பட்ட நபருக்கு இல்லை என்றால் சரிதான். என்னை காவல் ஆய்வாளர் எந்த தேதியில் விசாரித்தார் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் ஞாபகம் இல்லை. பொதுவாக காயச்சான்றும், விபத்து பதிவேடும் தனி தனி தாளில் பதிவு செய்வது வழக்கம்

என்றால் சரிதான். மேற்படி காயங்கள் கீழே விழும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் ஏற்படலாம்.

1 வது எதிரி 2 ஆம் எதிரிரியன் குறுக்கு விசாரணையை அப்படியே ஏற்றுக்கொள்கிறார்.
மறு விசாரணை - இல்லை.

/signed /

செழியன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

சார்பு நீதிபதி
இலால்குடி